மையமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

நியாய விலைக் கடை

***19167—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கிருஷ்ணன்கோவில் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் பாட்டக்குளம், சல்லிபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ், சொக்கலாம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 405 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 170 குடும்ப அட்டைகளை உள்ளடக்கிய கிருஷ்ணன்கோவில் பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. இரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட தூரம், நிர்ணயிக்கப்பட்டுள்ள 1½ கி.மீ. தூரத்திற்குப் பதிலாக, 1 கி.மீ. மட்டுமே உள்ளது. அரசு வகுத்தமைத்த நெறிமுறைகளின்படி, குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். ஆனால், இந்நேர்வில் தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்தால், 235 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். எனவே, இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியாகாததால், கிருஷ்ணன்கோவில் பகுதியில் நியாய விலைக் கடை தொடங்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள கிருஷ்ணன்கோவில் வளர்ந்து வருகின்ற பகுதி. இந்தப் பகுதியில் கிருஷ்ணன்கோவில், போக்குவரத்து நகர், கிருஷ்ணா நகர் போன்ற பகுதிகள் இன்றைக்குப் புதியதாக உருவாகியிருக்கின்றன. இவை மதுரை, தென்காசி தேசிய நெடுஞ்சாலையின் அருகில் அமைந்துள்ளன. இங்கிருந்துதான், இப்போதுள்ள நியாய விலைக் கடைக்குச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. கிருஷ்ணா நகர், போக்குவரத்து நகரிலிருந்து சொக்கலாம்பட்டிக்கு 2 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து செல்லவேண்டி இருக்கின்ற காரணத்தால், பல நேரங்களில் விபத்துகளும், பல்வேறு நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. எனவே, கிருஷ்ணன்கோவில், போக்குவரத்து நகர், கிருஷ்ணா நகர் போன்ற பகுதிகளை இணைத்து, கிருஷ்ணன்கோவிலில் புதிய நியாய விலைக் கடை அமைக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை நிறைவேறும். மேலும், விபத்துகளைத் தடுப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. எனவே, இந்த மூன்று பகுதிகளை உள்ளடக்கிய கிருஷ்ணன்கோவிலில் நியாய விலைக் கடை அமைத்துத் தருமாறு தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற 727 முழுநேர அங்காடிகள் மற்றும் 224 பகுதிநேர அங்காடிகளில், இரண்டு முழுநேர அங்காடிகளும், 37 பகுதிநேர அங்காடிகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் புதிதாகத் திறக்கப்பட்டன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமைகொள்கிறேன். குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுவதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*

[2014 ஜூலை 24

அம்மா அவர்கள் நித்தம், நித்தம் உறுதி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் இந்த அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அரசு வழிகாட்டுதலின்படி, விதிகள் பூர்த்தியாகாத நிலையில் புதிய பகுதிநேரக் கடைகள் திறக்கப்படும்போது, தாய்க் கடையின் விற்பனையாளர் பகுதிநேரக் கடைக்கு வாரத்தில் மூன்று நாட்கள் செல்லும்பொழுது, தாய்க் கடையின் அட்டைதாரர்களுக்கு பொருள்களை வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, விதிமுறைகள் பூர்த்தியாகும் நேர்வுகளில் மட்டுமே புதிய பகுதிநேர அங்காடிகள் திறக்க இயலும். எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டதைப் போல பிரத்யேக சிறப்புக் காரணங்கள் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்துரு பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் பல்வேறு நியாய விலைக் கடைகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். நான் கோருகின்ற கிருஷ்ணன்கோவில் கடை மிகவும் ஆபத்து நிறைந்த பகுதியில் இருக்கின்ற கடையாகும். அந்தப் பகுதியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். குடும்பங்கள் இருக்கின்ற பகுதி ஒரு பகுதியாகவும், பொருட்களை வாங்க வேண்டிய பகுதி வேறொரு பகுதியாகவும் இருக்கின்றது. எனவே, இந்தக் கடையைப் பிரிப்பதற்கு குன்னூர்புதுவயல் கடையிலிருந்து ஒரு பகுதியையும், சொக்கலாம்பட்டி கடையிலிருந்து ஒரு பகுதியையும் பிரிக்கின்றபட்சத்தில், அந்தப் புதிய கடையை உருவாக்கிக் கொடுக்கலாம். அதேபோல, பாணாங்குளம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் சென்று, விழுப்பனு கிராமத்தில் பொருட்களை வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அந்த

2014 ஜூலை 24]

பாணாங்குளம் கிராமத்தில் ஏறத்தாழ 270 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. எனவே, அந்தக் கடையையும் பகுதிநேரக் கடையாகப் பிரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதனை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 3-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை 459 முழுநேர அங்காடிகள், 904 பகுதிநேர அங்காடிகள் என 1,363 அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன என்பதனை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இதுதவிர, மலைவாழ் மக்களின் நலனுக்காக 27 நகரும் நியாய விலைக் கடைகள்மூலம் மலைப்பிரதேசங்களில் குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடத்திற்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாட்டில் மட்டும்தான் 33,973 நியாய விலை அங்காடிகளின்மூலம் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் சராசரியாக 585 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நியாய விலை அங்காடி செயல்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் 934 குடும்ப அட்டைகளுக்கு ஒரு அங்காடியும், குஜராத்தில் 638 குடும்ப அட்டைகளுக்கு ஒரு அங்காடியும், கர்நாடகாவில் 649 குடும்ப அட்டைகளுக்கு ஒரு அங்காடியும், மத்தியப் பிரதேசத்தில் 716 குடும்ப அட்டைகளுக்கு ஒரு அங்காடியும், இராஜஸ்தானில் 602 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு அங்காடியும், உத்தரப் பிரதேசத்தில் 600 குடும்ப அட்டைகளுக்கு ஒரு அங்காடியும், இன்னும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், நீண்ட நெடுநாட்களாக பொதுவுடைமை இயக்கம் ஆட்சியிலிருந்த மேற்கு வங்காளத்தில் 928 அட்டைகளுக்கு ஒரு அங்காடியும்தான் செயல்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

புதிய பணிமனை

***28384 திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, பெரிய ஊர்ச்சேரியில் புதிய பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் புதிய பணிமனையை அமைக்க கூட்டுறவு ஆலைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் பணிமனை அமைக்க வேண்டாம் என்று கரும்பு விவசாயிகள் தெரிவித்ததால், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, பணிமனை அமைக்க நிலமாற்றப் பிரேரணைகள் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின் தடையில்லா சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில மாற்றம் செய்யப்பட்ட பின்னர், அலங்காநல்லூரில் பெரிய ஊர்ச்சேரியில் பணிமனை அமைக்க நடவடிக்கை